வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 07 25.06.2026 வியாழக்கிழமை இதழ் : 170 பக்கங்கள் : 08




## மாகாண அதிகாரங்களை பாதுகாக்க தேர்தல் உடனே நடத்தப்படவேண்டும்!

### 13 ஐ பாதுகாப்பது அரசின் முக்கிய பொறுப்பு சபையில் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 25

மாகாண சபைகளின் உரிமைகள் மற்றும் அதிகாரங்களை பாதுகாப்பதற் காக மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்த வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பாராளுமன்றத்தில் நேற்று வலியுறுத்தியுள்ளார்.



நாட்டின் அரசியலமைப்பில் இடம்பெற்றுள்ள 13ஆவது திருத்தச் சட்டம், அரசியலமைப்பின் ஒரு முக்கிய பகுதியாக இருப்பதால் அதனை பாதுகாப்பது அரசின் பொறுப்பு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பாதிக்கும் வகையில் நடவடிக்கைகள் 07

# வவுனியா மேயர், சாவகச்சேரி உபதவிசாளர் வடக்கு ஆளுநரால் அதிரடியாக பதவி நீக்கம்!



### நேற்று வெளியாகியது வர்த்தமானி அறிவிப்பு

வவுனியா, ஜூன். 25

வவுனியா மாநகர சபையின் மேயர் சு.காண்டீபன் மற்றும் சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் ஞா. கிசோர் ஆகியோர் தங்களது பதவிகளில் இருந்து உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் அதிரடியாகப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகனால் இதற்கான உத்தியோகபூர்வ உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நேற்று அரச அச்சகத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

வவுனியா மாநகர சபை முதல்வரான சுந்தரலிங்கம் காண்டீபன் வவுனியா மாநகரசபை மேயர் பதவியிலிருந்தும், மாநகர சபை உறுப்பினர் பதவியிலிருந்தும் ஆளுநருக்கு உரிய அதிகாரங்களை பயன்படுத்தி நீக்கப்படுகிறார் என வர்த்தமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று சாவகச்சேரி நகர சபையின் உப தவிசாளர் ஞா.கிசோர் உப தவிசாளர் பதவியில் இருந்தும் உறுப்பினர் பதவியிருந்தும் நீக்கப்படுகிறார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு உள்ளூராட்சி மன்றப் பிரதிநிதிகளினதும் நடத்தை மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் தொடர்பாக பல்வேறு தரப்பினராலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன.

இது குறித்து முறையான விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரின் தலைமையில் விசேட விசாரணை ஆணைக்குழு ஒன்றை வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நியமித்திருந்தார். 07

## கேப்பாபிலவு காணிகளை விடுவிக்க கோரி தொடர் போராட்டத்தில் குதித்தனர் மக்கள்!

### வடக்கு ஆளுநரை தலையிடுமாறு கோரிக்கை



முல்லைத்தீவு, ஜூன். 25

முல்லைத்தீவு மாவட்டத்தின் கேப்பாபிலவு பகுதியில் தங்கள் பூர்வீக காணிகளை விடுவிக்கக் கோரி மக்கள் இராணுவ படைத்தலைமையகத்தின் முன்பாக நேற்று புதன்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். இந்தப் 07

## காங்கேசன் சிமெந்து ஆலையில் பெரும் தீ! இராணுவத்தின் உடைமைகள் எரிந்து நாசம்!!

யாழ்ப்பாணம், ஜூன். 25

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை வளாகத்தில் நேற்று மாலை ஏற்பட்ட திடீர் தீ விபத்து காரணமாகப் பெருமளவிலான பொருள்கள் எரிந்து நாசமாகியதுடன், அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சிமெந்துத் தொழிற்சாலையில் உள்ள பழைய இரும்புகளை அகற்றும் பணிகள் தற்பொழுது தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நேற்று மாலை இரும்பு அகற்றும் பணிகள் 07



## கோட்டாவின் மனு மீண்டும் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூன். 25

உயிர்த்த ஞாயிறு தின பயங்கரவாதத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளின் போது, தம்மை கைது செய் வதைத் தடுக்கும் உத்தரவை பிறப்பிக்குமாறு கோரி முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தாக்கல் செய்த ரிட் மனு மீதான மேலதிக விசாரணையை ஜூலை 06ஆம் திகதி வரை மேன்முறையீட்டு நீதி மன்றம் ஒத்திவைத்தது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் ரொஹாந்த அபேசூரிய மற்றும் நீதியரசர் சரத் திஸாநாயக்க ஆகியோர் அடங்கிய நீதியரசர் குழாம் முன்னிலையில் இந்த மனு 07

### டித்வா சூறாவளித் தாக்கம்

## வீடிழந்து இடம்பெயர்ந்த 1,336 பேர் இன்னும் பாதுகாப்பு மையங்களில்!

கொழும்பு, ஜூன். 25

டித்வா சூறாவளி தாக்கத்தின் காரணமாக வீடுகளை இழந்து இடம்பெயர்ந்த 1,336 பேர் இன்னும் நாட்டின் பல பகுதிகளில் உள்ள தற்காலிகப் பாதுகாப்பு மையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. 07

## கிளிநொச்சி போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி பதவி விலகவேண்டும்

### பொதுமக்கள் நேற்றுப் போராட்டம்



கிளிநொச்சி, ஜூன். 25

கிளிநொச்சி பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி உடன் பதவி விலக 07

## வடக்கு காணி மோசடிகளில் 9 பிரசித்த நொத்தாரிசுகள்!

யாழ்ப்பாணம், ஜூன். 25

வடக்கில் காணி மோசடிகளில் ஈடுபடும் 9 பிரசித்த நொத்தாரிசுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள பொலிஸார், காணி ஆவணங்கள் தொடர்பான விசேட பயிற்சிகளைத் தமது புலனாய்வுப் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு வழங்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் விசேட அழைப்பின் பேரில், பதிவாளர் நாயகத்துடனான உயர்மட்டக் கலந்துரையாடல் ஆளுநர் 07

## வடக்கில் காணி மோசடிகளை தடுக்க விரைவில் சட்ட திருத்தம்

யாழ்ப்பாணம், ஜூன். 25

வடக்கு மாகாணத்தில் "வெளிப்படுத்தல் உறுதி" ஊடாக இடம்பெறும் மிகப் பெரிய காணி மோசடிகளைத் தடுக்கும் வகையில், நொத்தாரிசு சட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சட்டத்திருத்தங்கள் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் சட்டவரைஞர் திணைக்களங்களுடன் விரைவில் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனப் பதிவாளர் நாயகம் சசிதேவி ஜலதீபன் உறுதியளித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனின் 07

## 16 வயதுக்குட்பட்டோருக்கு சமூக ஊடகங்களில் தடை?

### பாராளுமன்றத்தில் புதிய சட்டமூலம்

கொழும்பு, ஜூன். 25

இலங்கையில் 16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்துவதற்கான "சமூக ஊடகக் குறைந்தபட்ச வயது" எனும் தனிநபர் சட்டமூலம் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபாவினால் இந்தச் சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. 07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய கரைவலை மீன்பிடிக்கு அரசால் தடை விதிக்கப்படவில்லை



## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

கொழும்பு, ஜூன். 25

"பாரம்பரிய கரைவலை மீன்பிடி முறைமைக்குத் தடை விதிக்கப்படவில்லை. இதிலுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வருட கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. நாம் கடற்றொழிலாளர்களைக் கைவிட மாட்டோம்" என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு:-

கரைவலை மீன்பிடி என்பது ஒரு பாரம்பரிய முறைமையாகும். அந்த முறைமை இலங்கையில் தடை செய்யப்படவில்லை அது தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

எனினும், உழவு இயந்திரம் உள்ளிட்ட உபகரணங்களைப் பயன்படுத்தி, கடல்வளத்தை அழிக்கும் வகையில் முன்னெடுக்கப்படும் மீன்பிடி நடைமுறைகளே தடை செய்யப்பட்டுள்ளன.

எவ்வித அறிவியல் பூர்வமான ஆய்வுகளும் இன்றி, தமக்குத் தேவையான விதத்தில் கரைவலை மீன்பிடியில் ஈடுபடுவதற்கு கடந்த காலங்களில் துறைசார் அமைச்சர்கள் அனுமதி வழங்கியமையாலேயே கரைவலை மீன்பிடித் தொழிலில் பாரிய பிரச்னைகள் ஏற்பட்டன.

அப்பிரச்னையைத் தீர்ப்பதற்காகவே கரைவலை மீன்பிடித் தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

முதலில் நாம் இரு மாதங்கள் அவகாசம் கோரினோம். ஆனால், அந்த கால எல்லை போதாது என்பதால், அறிவியல் பூர்வமான தீர்வை வழங்குவதற்கு ஒரு வருட கால அவகாசம் கோரியிருந்தோம். மீனவர்களும் இதற்குச் சம்மதம் தெரிவித்துள்ளனர்.

கடல் வளங்களை நாசமாக்க இடமளிக்க முடியாது. சட்டவிரோத நடவடிக்கைகளையும் அனுமதிக்க முடியாது. நாம் கடற்றொழிலாளர்களை ஒரு போதும் கைவிடமாட்டோம்.

பாரம்பரியமான முறையில் கரைவலை மீன்பிடியில் ஈடுபடலாம் அதற்குரிய புதிய முறைமை உருவாக்கப்படும். எனவே, தடை செய்யப்பட்ட உபகரணங்களைப் பயன்படுத்தவேண்டாம்.

நாம் கால அவகாசம் கோரியுள்ள விடயத்தை வைத்து, அரசியல் நடத்தி மீனவர்களைக் குழப்புவதற்கு எதிர்க்கட்சியினர் முற்படக் கூடாது-என்றார்.(அ)

# வவுனியாவில் உலக சுற்றாடல் தின நிகழ்வு

வவுனியா, ஜூன். 25

வடக்கு மாகாண விவசாய அமைச்சும் வவுனியா மாவட்ட செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த உலக சுற்றாடல் தின நிகழ்வும், "அறுவடை" சஞ்சிகை வெளியீட்டு விழாவும் நேற்று காலை வவுனியா மாநகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் சண்முகராஜா சிவசிறீ தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக வவுனியா மாவட்ட செயலாளர் பி.ஏ. சரத்சந்திர கலந்துகொண்டார்.

மேலும், சிறப்பு அதிதியாக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் அ.அற்புதராஜா உள்ளிட்ட பல முக்கியஸ்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

நிகழ்வுக்கு முன்னதாக வவுனியா நகரசபை வாயிலிலிருந்து விருந்தினர்கள் பாரம்பரிய ஊர்வலமாக மாநகர சபை மண்டபத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

இதனைத் தொடர்ந்து கலாசார நிகழ்ச்சிகள், சுற்றாடல் விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் "அறுவடை" சஞ்சிகையின் வெளியீடு உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. (அ)

# வெற்றிலைக்கேணிப் பகுதியில் வெடிமருந்துடன் மீனவர் கைது!

யாழ்ப்பாணம்,ஜூன். 25

வடமராட்சி கிழக்குப் பகுதியில் வெடி மருந்துடன் கடற்றொழிலாளர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெற்றிலைக்கேணிப் பகுதியில் சட்டவிரோத கடற்தொழிலில் சிலர் ஈடுபடுவதாக கடற்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கடற்படையினர் திடீர் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது ஒரு கடற்தொழிலாளர் ஒருவர் வெடி மருந்துகளுடன் கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரின் படகையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்டவர் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை அனுமதிப் பத்திரம் இன்றியும் , வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 7 கடற்தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களின் மூன்று படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட கடற்தொழிலாளர்களை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்தொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினர்களால் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கண்டியில் பெண் மருத்துவர் சடலமாக மீட்பு; கொலை சந்தேக நபர் யாழில் வைத்து கைது!

## யாழ்.குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அதிரடி

யாழ்ப்பாணம், ஜூன். 25

கண்டி தெல்தெனிய பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றினுள் இருந்து பெண் மருத்துவரின் சடலம் கண்டெடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில், பிரதான சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ள உயிரிழந்த பெண்ணின் காதலன் மற்றும் அவரது மனைவி ஆகியோர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டனர்.

தம்பதியர் நேற்று முன்தினம் வெள்ளவத்தையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தபோது கிடைத்த தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாண குற்றப் புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகளால் அவர்கள் யாழ். நகரப் பகுதியில் பஸ் ஒன்றினுள் வைத்து கைது செய்யப்பட்டதாக நுவரெலியா மாவட்டத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக நுவரெலியா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இதேவேளை கடந்த ஜூன் 17ஆம் திகதி இடம்பெற்ற இந்த கொலை சம்பவம் தொடர்பாக நுவரெலியா பொலிஸார் மேற்கொண்ட தீவிர விசாரணைகளில், சந்தேக நபர் பல்வேறு மோசடி வழக்குகளில் தொடர்புடையவர் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

பொலிஸாரின் தகவலின்படி, ஹொரம்பாவ-கொஸ்கொல்ல பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர், திருமணம் செய்து கொள்வதாக வாக்குறுதி அளித்து பெண்களிடம் பெருமளவு பணம் மோசடி செய்ததுடன், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் வாகன இறக்குமதி தொடர்பான பல மோசடி நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

மேலும், அவரது மனைவிக்கும் இந்த மோசடி வலையமைப்புடன் தொடர்பு இருப்பதாக விசாரணைகளில் வெளிப்பட்டுள்ளது.

சந்தேக நபருக்கு எதிராக கம்பஹா மேல் நீதிமன்றம், புதுக்கடை நீதவான் நீதிமன்றம், திஸ்ஸமஹாராம நீதவான் நீதிமன்றம் உள்ளிட்ட பல நீதிமன்றங்களில் வழக்குகள் நிலுவையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருமண வாக்குறுதியை பயன்படுத்தி பல மில்லியன் ரூபாய் மோசடி செய்தமை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குவதாக கூறி பணம் பெற்றமை மற்றும் வாகன மோசடிகள் தொடர்பான குற்றச்சாட்டுகள் அவர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

# வடக்கு மாகாணத்தின் வளங்களை முழுமையாக பயன்படுத்தவேண்டும்

## ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஜூன் 25

வடக்கு மாகாணத்தின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியில் பல தசாப்தங்களின் பின்னர் கரும்புச் செய்கை மீள ஆரம்பிக்கப்பட்ட நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், "கரும்பு மீள்நடுகைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை, எமது வளங்களை உரிய முறையில் பயன்படுத்த ஆரம்பித்துள்ளோம் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகிறது" எனக் குறிப்பிட்டார்.

'நாமும் கரும்பும்' செயற்றிட்டத்தின் கீழ் விவசாயிகள், கரும்பு ஆராய்ச்சி நிறுவனம், கரும்புச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கம் மற்றும் 'நேச்சுரல் ரூட்ஸ்' நிறுவனம் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

விவசாயிகள் பெரும்பாலும் நெற்செய்கையில் அதிக கவனம் செலுத்துகின்ற நிலையில், நெல்லுக்கான சந்தைப்படுத்தல் சவாலாக இருப்பதாக ஆளுநர் சுட்டிக்காட்டினார். நெல் உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் சந்தைப் பிரச்னைகளை கருத்தில் கொண்டு, அதிக வருமானம் தரக்கூடிய மாற்றுப் பயிர்ச்செய்கைகளிலும் கவனம் செலுத்த வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார்.

கரும்புச் செய்கைக்கு பொருத்தமான காணிகளில் விவசாயிகள் ஈடுபடுவதன் மூலம் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும் எனவும், ஏற்றுமதி தேவைக்காக கரும்பு கொள்வனவு செய்ய நிறுவனங்கள் தயாராக இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட செயலாளர் சு.முரளிதரன், கரும்புச் செய்கை மூலம் 10 முதல் 12 மாதங்களில் சுமார் இரண்டரை இலட்சம் ரூபாய் வரை இலாபம் பெற முடியும் எனத் தெரிவித்தார். மேலும், மூலப்பொருள்களை வெளியே அனுப்புவதற்குப் பதிலாக பெறுமதிசேர் பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்வது அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

முதற்கட்டமாக 20 விவசாயிகளுக்கு 20 ஏக்கர் காணிகள் கரும்புச் செய்கைக்காக வழங்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கரும்புச் செய்கையில் முன்பு ஈடுபட்ட விவசாயிகள் கௌரவிக்கப்பட்டனர். பல அரச அதிகாரிகள் மற்றும் விவசாயத் துறை பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (அ)

# இலங்கை விமானப்படைக்கு 10 ஹெலிகள் வழங்கிய அமெ.

கொழும்பு, ஜூன். 25

இலங்கை விமானப்படையின் விமானிகள் பயிற்சித்திறனை மேம்படுத்துவதற்கும், விமானச் செயற்பாடுகளை விரிவுபடுத்துவதற்கும் அமெரிக்க அரசாங்கத்தினால் நன்கொடையாக வழங்கப்பட்ட ரிசி-57 "சீ ரேஞ்சர்" ரக 10 பல்பயன்பாட்டு ஹெலிகொப்டர்கள் உத்தியோகபூர்வமாக பொறுப்பேற்கப்பட்டன.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முன் தினம் பிற்பகல் இரத்மலானை விமானப்படைத் தளத்தில் நிகழ்வு நடைபெற்றது.

இரத்மலானை விமானப்படை தளத்துக்கு நேற்று முன்தினம் பிற்பகல் வருகை தந்த ஜனாதிபதிக்கு விமானப்படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் கூடிய பிரம்மாண்ட வரவேற்பு அளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஹெலிகொப்டர்களை ஜனாதிபதி பார்வையிட்டார். இதன்போது இரு தரப்பு ஒப்பந்தமொன்றும் கையெழுத்திடப்பட்டது. விமானப்படை தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க மற்றும் அமெரிக்க பசிபிக் விமானப்படை தளபதி ஜெனரல் கெவின் ஷ்னைடர் ஆகியோர் இதில் கையெழுத்திட்டனர். (அ)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
25.06.2026 வியாழக்கிழமை

பராபவ வருடம், ஆனி 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும் புதிய அரசியலமைப்பும்

அரசாங்கங்கள் அவற்றின் பதவிக் காலத்தின் முற்பகுதியிலேயே புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளை முன்னெடுப்பது வழமை.

பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கம் இலங்கையின் முதலாவது குடியரசு அரசியலமைப்பை (1972) பதவிக்கு வந்த இரண்டாவது வருடத்தில் கொண்டுவந்தது. ஜனதா விமுக்தி பெரமுனவின் (ஜே.வி.பி.) முதலாவது கிளர்ச்சி (1971 ஏப்ரல்) இடம்பெறாமல் இருந்திருந்தால் அந்த அரசாங்கம் முன்கூட்டியே புதிய அரசியலமைப்பைக் கொண்டு வந்திருக்கவும் கூடும்.

தற்போது 48 வருடங்களாக நடைமுறையில் இருந்துவரும் இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் பதவிக்கு வந்து 14 மாதங்களுக் குள் கொண்டுவந்தது. முதலாவது குடியரசு அரசியலமைப்பு ஆறு வருடங்கள் மாத்திரமே நடைமுறையில் இருந்தது.

தற்போதைய அரசியலமைப்பே இலங்கையில் மிகவும் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வருகிறது. அது அரை நூற்றாண்டைக் கடந்து விடுவதற்கு முன்னதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கியதன் பிரகாரம் புதிய அரசியலமைப்பை கொண்டுவருவதற்கான சாத்தியங்கள் குறித்து கடுமையான சந்தேகம் நிவுகிறது.

இத்தகைய பின்புலத்தில், புதிய அரசியலமைப்பு தொடர்பாக பிரதமர் ஹரிணி அமரசூரிய இவ்வாரம் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்த கருத்துக்கள் கவனத்துக்கு உரியவையாகின்றன.

புதிய அரசியலமைப்பைக் கொண்டுவரும் விடயத்தில் அரசாங்கம் இதுவரையில் முக்கிய கவனத்தை செலுத்தவில்லை என்று பரவலாக நிலவும் அபிப்பிராயத்தை மனதிற்கொண்டு பிரதமர் அந்த நேர்காணலில் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார் என்று தெரிகிறது.

புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளுக்கு தற்போதைய சூழலில் அரசாங்கம் முன்னுரிமை அளிக்கவில்லை என்பதை ஏற்றுக் கொண்ட அமரசூரிய புதிய அரசியலமைப்பு நிச்சயம் கொண்டு வரப்படும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

“அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகளுக்கு தற்போதைய காலப்பகுதியில் முன்னுரிமை வழங்கப்படவில்லை என்பதை மறைக்காமல் ஏற்றுக்கொள்கிறோம். அந்த விவகாரம் தொடர்பில் ஆரம்பக் கட்டப் பேச்சுவார்த்தைகளும் பூர்வாங்க நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றன. நாடு தற்போது முகங்கொடுக்கும் சவால் மிகு சூழ்நிலையில் பொருளாதாரம், உட்கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகிய அத்தியாவசிய தேவைகளுக்கே அரசாங்கம் கூடுதல் முக்கியத்துவத்தைக் கொடுக்கிறது” என்று பிரதமர் கூறியிருக்கிறார்.

அரசாங்கத் தலைவர்களில் அனேகமாக பிரதமர் அமரசூரியவே புதிய அரசியலமைப்பு வரைவுச் செயன்முறை பற்றி கடந்த ஒன்றரை வருட காலத்திற்குள் அவ்வப்போது பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கருத்துக்களைத் தெரிவித்து வந்திருக்கிறார். குறிப்பாக, ஜே.வி.பி.யின் தலைவர்கள் அதைப் பற்றி பேசுவது குறைவு.

பிரதமர் நேர்காணலில் தெரிவித்திருக்கும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது பொருளாதார மீட்சி மற்றும் வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதன் காரணமாக அரசியலமைப்பு விவகாரத்தில் கவனத்தை செலுத்த முடியாமல் இருக்கிறது என்றால் எப்போதைக்கு அந்த செயன்முறைகளில் கவனத்தைச் செலுத்தக்கூடியதாக உகந்த சூழ்நிலை உருவாகும் என்ற கேள்வி எழுகிறது. பொருளாதார மீட்சியும் வறுமை ஒழிப்பும் அண்மைய எதிர்காலத்தில் நிறைவேறக்கூடிய விடயங்கள் அல்ல.

தங்களது அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் இன்னமும் இருக்கும் மூன்று வருடங்கள் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்குப் போதுமானது என்று கூறுகின்ற அதேவேளை, தற்போதைய ஆட்சிக் காலத்துக்கு பிறகும் தாங்கள் முன்னெடுக்கும் மக்கள் நலச் சேவைகளைக் கண்டு மக்கள் தங்களுக்கே மீண்டும் பலம்பொருந்திய ஆணையை மக்கள் வழங்குவார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்று பிரதமர் கூறுவதைப் பார்த்தால், புதிய அரசியலமைப்பைக் கொண்டுவருவதற்கு தேசிய மக்கள் சக்திக்கு இன்னொரு பதவிக்காலத்துக்கு ஆணையைத் தருமாறு நாட்டு மக்களை இவர்கள் கேட்பார்களோ என்ற நியாயமான சந்தேகம் எழுகிறது.

# பாராளுமன்றத்தில் நசுக்கப்படும் எதிரணியின் ஜனநாயக உரிமைகள்



தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செவ்வாய்க்கிழமை அன்று, நீதித்துறை தொடர்பான சில முக்கிய பிரச்னைகள் குறித்து பாராளுமன்றத்தில் விவாதிப்பதற்கான வாய்ப்பை எதிர்க்கட்சியினரிடமிருந்து பறிக்க எவ்வித தயக்கமும் காட்டவில்லை. உயர்நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் தலா நான்கு வீதம் காணப்படும் வெற்றிடங்கள் குறித்தும், அந்த நீதிமன்றங்களின் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதற்கான ஒரு மறைமுக நகர்வு குறித்தும் விவாதம் நடத்துமாறு நிலையியற் கட்டளைகளின் கீழ் எதிர்க்கட்சிகள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்திருந்தன.

இருப்பினும், அரசாங்கம் இதற்கு ஆட்சேபனை தெரிவித்து எதிர்க்கட்சியினரின் முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தது, இது சபையில் பெரும் போராட்டங்களைத் தூண்டியது. அரசாங்க உறுப்பினர்களால் தங்களது நிலைப்பாட்டை நியாயப்படுத்த முடியாது என்பதால், மேற்கூறிய பிரச்னைகள் குறித்து ஒரு சுருக்கமான விவாதத்தைக் கூட அவர்கள் விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

அரசியலமைப்பின் படி, மக்களின் நீதித்துறை அதிகாரம் நீதிமன்றங்கள் போன்றவற்றின் ஊடாக பாராளுமன்றத்தினாலேயே பயன்படுத்தப்படுகிறது, எனவே நீதித்துறையில் நிலவும் வெற்றிடங்கள் மற்றும் நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை அதிகரிப்பதற்கான அரசாங்கத்தின் சந்தேகத்திற்குரிய நகர்வு போன்ற பிரச்சினைகள் குறித்து விவாதிக்க வேண்டிய கடமை பாராளுமன்றத்திற்கு உள்ளது என்று சில எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் மிகச் சரியாகச் சுட்டிக்காட்டினர்.

ஆனால், சபைத் தலைவரும் அமைச்சருமான பிமல் இரத்நாயக்க, கடந்த அரசாங்கத்தின் போது ஒரு தீர்ப்புக்காக உயர்நீதிமன்ற நீதிபதிகளை பாராளுமன்றக் குழுவொன்றின் முன்னிலையில் அழைப்பதற்கு சில உறுப்பினர்கள் மேற்கொண்ட முயற்சியை நினைவு கூர்ந்து, எதிர்க்கட்சியினரை கடுமையாகச் சாடினார்.

தற்போது எதிர்க்கட்சியில் இருக்கும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி - ஐக்கிய தேசிய கடி (2015 - 2019) அரசாங்கத்தின் உறுப்பினர்கள், தங்களுக்குப் பிடிக்காத தீர்ப்புகளை வழங்கிய நீதிபதிகளை விமர்சித்தும், நீதிமன்ற உத்தரவுகளை மீறி தேர்தல்களை ஒத்திவைத்தும் நீதித்துறையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்தினர் என்பது உண்மைதான். ஆனால், இரண்டு தவறுகள் ஒருபோதும் ஒரு சரியை உருவாக்கிவிடாது.

உயர்நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் ஓய்வு பெறும் வயதை நீடிப்பதற்கான அரசாங்கத்தின் நகர்வை இலங்கை சட்டத்தரணிகள் சங்கம், கொழும்பு மேல் நீதிமன்ற சட்டத்தரணிகள் சங்கம் போன்றவை கடுமையாக விமர்சித்துள்ளதுடன், அந்த இரு நீதிமன்றங்களிலும் உள்ள வெற்றிடங்களை உடனடியாக நிரப்புமாறு வலியுறுத்தியுள்ளன.

அரசாங்கம் நீதித்துறையின் நேர்மையை சீர்குலைத்து, தனது அரசியல் நலன்களை மேம்படுத்துவதற்காக நீதிபதிகளின் பதவி உயர்வுகள் போன்றவற்றை ஒரு கருவியாகப் பயன்படுத்த முயல்கிறது என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டும் அளவிற்குச் சென்றுள்ளன. இவை பாராளுமன்றத்தில் அவசரமாக விவாதிக்கப்பட வேண்டிய பிரச்னைகளாகும்.

ஆயுர்வேதத்தில் வாத, பித்த, கப ஆகிய மூன்றின் மாறும் சமநிலை ஒரு மனிதனின் ஆரோக்கியத்திற்கு எவ்வளவு முக்கியமோ, அதேபோல ஒரு நாட்டின் ஜனநாயக ஆரோக்கியத்திற்கு அரசாங்கத்தின் மூன்று தூண்களான சட்டத் துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை ஆகியவற்றின் இணக்கமான செயல்பாடும் முக்கியமாகும். இரண்டு சூழ்நிலைகளிலும் சமநிலையின்மை என்பது ஆபத்தையே கொண்டுவரும்.

துரதிர்ஷ்டவசமாக, கடந்த பல தசாப்தங்களாக எந்தவொரு அரசாங்கமும் அதிகாரப் பகிர்வுக் கோட்பாட்டை முழுமையாகப் பின்பற்றவில்லை, மேலும் நிறைவேற்று அதிகாரக் கொண்ட ஜனாதிபதி முறைமை இந்த சூழ்நிலையை மேலும் மோசமாக்கியுள்ளது.

அனைத்து நிறைவேற்று அதிகார ஜனாதிபதிகளும் சட்டத்துறையிலும் நீதித்துறையிலும் தலையிட்டுள்ளனர். தற்போதைய நிர்வாகம் தனது தேர்தல் பிரச்சாரங்களின் போது வாக்குறுதி அளித்த “மாற்றம்” என்பது வெறும் கானல் நீராகிவிட்டது.

ஜனாதிபதி அநுர குமார திசநாயக்க, சட்டத் துறையைத் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பதாகவும் நீதித்துறையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளார். ஜே.வி.பி./ தேசிய மக்கள் சக்தி அரசியல்வாதிகள் தங்களுக்கு இருக்கும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையைப் பற்றி பெருமை பேசுவதற்கான எந்தவொரு வாய்ப்பையும் தவறவிடுவதில்லை.

அமைச்சர் இரத்நாயக்க செவ்வாய்கிழமை அரசாங்கத்தின் இந்த விசேட பெரும்பான்மையை எதிர்க்கட்சிக்கு நினைவூட்டினார்.

இலங்கை அரசியல்வாதிகள் அனைவரிடமும் காணப்படும் ஒரு பொதுவான பண்பு என்னவென்றால், அதிகாரம் அவர்கள் தலைக்கேறிவிடுகிறது. இந்த நாட்டில் இவ்வாறான இரும்புக்கரம் கொண்ட பெரும்பான்மைகள் ஒரு சாபக்கேடாகவே அமைந்துள்ளன. அதிகார போதையில் இருக்கும் அரசாங்கங்கள் அகந்தையை வெளிப்படுத்துகின்றன, ஆக்ரோஷமானவையாக மாறுகின்றன, கருத்து வேறுபாடுகளை ஒடுக்குகின்றன, மேலும் இந்த செயல்பாட்டின் மூலம் தங்களது சொந்த அரசியல் கல்லறைகளைத் தாங்களே தோண்டிக் கொள்கின்றன.

இந்த நாட்டில் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தலில் இத்தகைய விசேட பெரும்பான்மையைப் பெற்ற எந்தவொரு அரசாங்கமும் இரண்டாவது முறையைத் தக்க வைத்துக் கொண்டதில்லை.

தொகுதிவாரி தேர்தல் முறையின் கீழ் ஆறில் ஐந்து பங்கு பெரும்பான்மையைப் பெற்ற ஜே.ஆர். ஜெயவர்தன அரசாங்கம், 1982 ஆம் ஆண்டில் பெருமளவில் முறைகேடுகள் நடந்த ஒரு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

ஜே.வி.பி.யின் பயங்கரவாத அட்டகாசம் காரணமாக, பல மக்கள் வாக்களிக்க முடியாமல் போனதாலும், ஐக்கிய தேசிய கட்சியினர் வாக்குப்பெட்டிகளை நிரப்பக்கூடிய சூழ்நிலை உருவானதாலும் தான் 1982, 1989 பொதுத் தேர்தல்களில் அவர்களால் வெற்றி பெறக்கூடியதாக இருந்தது. மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசாங்கத்தையோ (1970-1977), கிந்த ராஜபக்ச அரசாங்கத்தையோ (2010-2015) அல்லது கோட்டாபய ராஜபக்ச அரசாங்கத்தையோ காப்பாற்ற முடியவில்லை.

அரசியல் அதிகாரத்தினதும் இவ்வாறான மாபெரும் பாராளுமன்ற பெரும்பான்மைகளினதும் நிலையற்ற தன்மை இதுவேயாகும்.

ஜே.வி.பி / தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தனது பாராளுமன்ற பெரும்பான்மையைத் தவறாகப் பயன்படுத்தி தனது வழியில் செல்ல முடியும், ஆனால் நீதித்துறை சுதந்திரத்தைப் பாதிக்கும் பிரச்சினைகளை பாராளுமன்றத்தில் விவாதிக்க மறுப்பதை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாது. “அதிகாரத்தில் இருக்கும் மனிதர்களை விட, மக்களின் அதிகாரமே மிக உன்னதமானது” என்ற பழமொழியை அது நினைவில் கொள்ள வேண்டும்.

(த ஐலண்ட் ஆசிரிய தலையங்கம் 24 ஜுன் 2026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**மேடம்**
ஆடை ஆபரணம் சேரும். மனைவி வழியில் ஆதரவு பெருகும். தாயாரின் உடல் நிலை சீராகும். உத்தியோகத்தில் வேலைகளை உடனடியாக முடிப்பீர்கள். தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**இடபம்**
வாகன வசதிப் பெருகும். உறவினர் நண்பர்களில் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளரின் நம்பிக்கையை பெறுவீர்கள். பெருந்தன்மையுடன் நடந்துக் கொள்ளும் நாள்.

**மிதுனம்**
சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் வரும். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். நினைத்தது நிறைவேறும்.

**கடகம்**
பயணங்களால் பயனடைவீர்கள். பழைய கடனைத் தீர்க்க முயற்சி செய்வீர்கள். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் வந்து போகும். சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். உழைப்பால் உயரும் நாள்.

**சிம்மம்**
விருந்தினர் வருகை அதிகரிக்கும். பேச்சில் கம்பீரம் பிறக்கும். வியாபாரத்தில் அனுபவமிக்க வேலையாட்களை தேடுவீர்கள். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள்.

**கன்னி**
கணவன் - மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். வியாபாரத்தில் சில தந்திரங்களை கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். வளைந்து கொடுத்து செல்ல வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
வேலைச்சுமையால் உடல் அசதி மனச்சோர்வு வந்து நீங்கும். வியாபாரத்தில் புது முதலீடு செய்யலாம். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டும்.

**தனுசு**
திட்டமிட்ட காரியங்கள் கைக்கூடும். சபைகளில் மரியாதை கிடைக்கும். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கையாளர்கள் ஆவார்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள். மதிப்பு மரியாதை கூடும் நாள்.

**மகரம்**
பிள்ளைகளின் பொறுப்புணர்வு அதிகமாகும். சில பொறுப்புகளை ஏற்பீர்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் சாதிக்கும் நாள்.

**கும்பம்**
இதுவரை இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். உத்தியோகத்தில் புது அதிகாரி உங்களை மதிப்பார்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரே நாளில் நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். உத்தியோகத்தில் கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டிவரும். பொறுப்புணர்ந்து செயல்பட வேண்டும்.

# உள்ளூராட்சி மட்டத்தில் மீள்திறனை கட்டியெழுப்புவது குறித்து ஆராய்வு

கிளிநொச்சி, ஜூன். 25

உள்ளூராட்சி மட்டத்தில் மீள்திறனைக் கட்டியெழுப்புவதற்காக, சமூகத்தால் தகவல் மற்றும் அனுபவத்தை கொண்டு, காலநிலை இடர் குறைப்பு ஆகியவற்றை ஒருங்கிணைத்தல் என்ற தலைப்பிலான திட்டம் தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் கிளிநொச்சியில் இடம்பெற்றது.

கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம், உணவு மற்றும் விவசாய அமைப்பு, ஐ.நா. வாழ்விட அமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் அமைச்சு ஆகியவற்றுடன் இணைந்து, குறித்த திட்டத்திற்கு நிதி வழங்கும் அமைப்பிடம் வழங்கும் பொருட்டு, திட்டத்தை தயாரிப்பதற்கான கலந்துரையாடல் நடத்தப்பட்டது.

மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எஸ்.மோகனபவன் தலைமையில் விடயங்கள் ஆராயப்பட்டன.

முன்மொழியப்பட்ட திட்டமானது, பிரஜாசக்தி தேசிய இயக்கத்தில் ஈடுபட்டுள்ள நலிவடைந்த சமூகங்களின் காலநிலை மீள்திறனையும் தகவலமைப்புத் திறனையும் வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இதன் மூலம், மாறிவரும் காலநிலைச் சூழல்களில், அவர்கள் காலநிலை அபாயங்களை நிலைத்தன்மையுடன் நிர்வகிக்கவும், தங்கள் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்கவும் இயலும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான எட்டு மாவட்டங்கள் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றில் கிளிநொச்சி மாவட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில், தொழில்நுட்ப உத்தியோகத்தர் அசோக அஜந்த, கரைச்சி பிரதேச செயலாளர் த.முகுந்தன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப் பணிப்பாளர் ஆ.அழகக்கோன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர்கள், கிராம சேவையாளர்கள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் பங்கேற்றனர். (அ)

# சுகாதாரச் சீர்கேட்டுடன் இயங்கி வந்த வடை தயாரிப்பு நிலையம் மூடப்பட்டது!

மன்னார், ஜூன். 25

மன்னார் - பள்ளிமுனை பிரதான வீதியில் இயங்கி வந்த வடை தயாரிப்பு நிலையம் ஒன்று, உடனடியாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

சுகாதார அதிகாரிகளால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வின்போது, சுகாதாரச் சீர்கேடுகளுடன் இயக்கியமை கண்டறியப்பட்டு, உடனடியாக தற்காலிகமாக மூடப்பட்டது.

மன்னார் நகர சபை பொது சுகாதார பரிசோதகர் மற்றும் மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் அடங்கிய குழுவினர், குறித்த வடை தயாரிப்பு நிலையத்தில் திடீர்ச் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

குறித்த நிலையத்தில், உணவுப் பொருள்கள் மனித பயன்பாட்டுக்கு ஒவ்வாத வகையிலும், மிகவும் சுகாதாரமற்ற முறையிலும் தயாரிக்கப்படுவது அதிகாரிகளால் உறுதி செய்யப்பட்டது.

உணவு தயாரிக்கும் இடத்தில் ஈக்கள் அதிக அளவில் காணப்பட்டன.

கழிவுநீர் முறையாக வெளியேற்றப்படாமல் சுகாதார பாதுகாப்பின்றி தேங்கியிருந்தது.

கோழிகள், புறாக்கள் மற்றும் ஏனைய செல்லப் பிராணிகளின் கழிவுகள் காணப்பட்ட அசுத்தமான சூழலில் உணவு தயாரித்தமை, உணவு தயாரிக்கும் இடத்தின் ஒட்டுமொத்த சுகாதாரம் மிகவும் மோசமாக இருந்தமை போன்ற குறைபாடுகள் அடையாளம் காணப்பட்டன.

அதனால், உடனடியாக அமுலுக்கு வரும் வகையில், குறித்த நிலையத்தில் உணவு தயாரிப்பு நடவடிக்கைகள் நிறுத்துமாறு உரிமையாளருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

சுகாதாரத்துறையினால் சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளை முழுமையாக நிவர்த்தி செய்து, இடத்தை சுத்தப்படுத்தி, சுகாதாரமான முறையில் மீள் அனுமதி பெறும் வரை நிலையத்தை இயங்க வேண்டாம் என அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

# பலாலி விமான நிலையத்தில் நடராஜர் சிலை விரைவாக பிரதிஷ்டை செய்யப்படவேண்டும்!

**வடக்கு அவைத்தலைவர் சிவஞானம் வலியுறுத்து**

யாழ்ப்பாணம், ஜூன். 25

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட நடராஜர் சிலையை விரைவாக பிரதிஷ்டை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கடற்றொழில் அமைச்சருமான இ.சந்திரசேகருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், அண்மையில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திற்காக அன்பளிப்பாக வழங்கப்பட்ட நடராஜர் சிலை இதுவரை நிறுவப்படாமல் இருப்பது குறித்து எம்மால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்த விடயத்தில் அமைச்சரும் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரும் அக்கறையுடன் தலையிட்டு, குறித்த சிலையை விமான நிலையத்தில் நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தேன்.

அதனை மீண்டும் நினைவூட்டி நடராஜர் சிலையை துரிதமாக நிறுவுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்-என வலியுறுத்தியுள்ளார். (அ)

# வவுனியாவில் பல்வேறு இடங்களில் இறைவரி அதிகாரிகள் சோதனை!

வவுனியா, ஜூன். 25

வவுனியாவின் பல வர்த்தக நிலையங்களில் இறைவரி திணைக்களத்தின் வருமான வரி அறவீட்டு அதிகாரிகள் நேற்று முன் தினம் சோதனை மேற்கொண்டனர்.

இறைவரி திணைக்களத்தின் வருமான வரி அறவீட்டு அதிகாரிகள் தமது செயற்பாட்டை நாடு பூராகவும் முன்னெடுத்து வரி அறவீட்டு நடவடிக்கைகளை சீர்செய்தும் ஒழுங்கமைத்தும் வருகின்றனர்.

அதற்கமைவாக வவுனியாவில் நேற்று முன் தினம் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரி அறவீடு தொடர்பான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

அதன்படி நகைக் கடைகள், ஹாட்வெயார்கள், பல்பொருள் அங்காடிகளில் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

# ஞானச்சுடர் வெளியீடு நாளை சந்நிதியில்

வடமராட்சி, ஜூன். 25

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் ஆனி மாத 332 ஆவது மலர் வெளியயீட்டு விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 10 30 வணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் ஆச்சிரமப் பொறுப்பாளர் சாதனைத்தமிழன் உயர் சைவத்திரு செ மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் டைபெறவுள்ளது

நிகழ்வில் வெளியீட்டுரையை ஆசிரியர் ச. வாகீசனும் மதிப்பீட்டுரையை ஆசிரியர் க. கைலைநாதனும் நிகழ்த்துவார்கள்.(அ-02)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# “கிளீன் சிறீலங்கா” ஒரு கண் துடைப்பு!

## நாமல் ராஜபக்ஷ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜுன். 25

அரசாங்கம் முன்னெடுத்து வரும் “கிளீன் சிறிலங்கா” திட்டம் உண்மையான மாற்றத்தை ஏற்படுத்தும் நடவடிக்கை அல்ல; மக்களை ஏமாற்றும் ஒரு கண் துடைப்பு நடவடிக்கை என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ குற்றம் சாட்டியுள்ளார்.

பொதுஜன பெரமுன தலைமையகத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், தற்போதைய அரசாங்கம் எதிர்க்கட்சியில் இருந்தபோது விவசாயிகளுக்காக போராடியதாக கூறிய போதிலும், ஆட்சிக்கு வந்த பின்னர் விவசாயிகளை புறக்கணித்துள்ளதாக தெரிவித்தார்.

நெல்லுக்கு நியாயமான விலை வழங்கப்படாமை, விவசாயிகளுக்கு தேவையான உரம் கிடைக்காத நிலை உள்ளிட்ட காரணங்களால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், தேயிலை மற்றும் காய்கறி உற்பத்தியாளர்களின் பிரச்னைகளுக்கும் அரசாங்கம் உரிய தீர்வு வழங்கவில்லை என்றும் அவர் கூறினார்.

நாட்டின் விவசாயக் கொள்கைகள் மக்களின் நலனை விட சில வர்த்தகர்களின் நலனை முன்னிலைப்படுத்துவதாகவும் நாமல் ராஜபக்ஷ குற்றம் சுமத்தினார்.

மேலும், சமூக ஊடகங்களில் நாடு சுத்தமாக்கப்பட்டதாக ஒரு தோற்றம் உருவாக்கப்பட்டாலும், டெங்கு உள்ளிட்ட சுகாதாரப் பிரச்னைகள் தொடர்ந்தும் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

“நாட்டை சுத்தம் செய்கிறோம் என கூறும் அரசாங்கம், உண்மையில் நிதி நிர்வாகத் தையே சுத்தம் செய்து கொண்டிருக்கிறது” என விமர்சித்த அவர், துறைமுக கொள்கலன் விவகாரம், பணப் பரிமாற்ற முறைகேடுகள் மற்றும் வரி சுமைகள் தொடர்பாகவும் அரசாங்கத்தை குற்றம் சாட்டினார். (அ)

# மாகாணத் தேர்தலில் வடக்கு-கிழக்கு தவிர ஏனைய இடங்களில் நாங்களே வெல்வோம்!




கொழும்பு, ஜுன். 25

மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டால் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை எமக்கு இன்னும் ஏற்படவில்லை என்று பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

தேர்தல் நடத்தப்பட்டால் மீண்டும் 3 சதவீதத்துக்கு இறங்கிவிடுவோம் என அரசாங்கம் அஞ்சுகின்றது. அதனால்தான் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் இழுத்தடிக்கப்படுகின்றது.

தேர்தல் நடத்தப்பட்டால் நிச்சயம் நாம் போட்டியிடுவோம். வடக்கு-கிழக்கு பகுதிகளில் எல்லாம் வெல்ல முடியும் என்ற நம்பிக்கை இல்லை.

தற்போதைய நிலைவரப்படி ஏனைய சபைகளில் ஐந்து சபைகளில் பொதுஜன பெரமுன கட்சி ஆட்சி அமைக்கும். எமது தலைமையிலான கூட்டணியே மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெறும்-என்றார். (அ)

# நீங்கள் வரி செலுத்தவில்லையா? வங்கி கணக்குகள் முடக்கப்படும்

கொழும்பு, ஜுன். 25

இலங்கையில் வரி செலுத்துவோர், உள்நாட்டு இறைவரி திணைக்களத்திற்கு 550 பில்லியன் ரூபாய்க்கும் அதிகமான தொகையை வரியாகச் செலுத் தவேண்டியுள்ளதாகத் தெரியவந் துள்ளது.

அண்மைய வரி சீர்திருத்தங்கள் குறித்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இதனை வெளிப்படுத்தினர்.

இந்த வரி நிலுவைத் தொகையில் சுமார் 100 பில்லியன் ரூபாயை வசூலிப்பதற்காக ஏற்கனவே சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இது தவிர, வரி நிலுவைகளை வசூலிப்பதற்காக வங்கிக் கணக்குகளை முடக்குதல் மற்றும் சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் போன்ற கடுமையான நடைமுறைகளும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் கீழ் முறையான ஏற்பாடுகள் காணப்படுவதால், நீதிமன்ற உத்தரவு இன்றியே வங்கிக் கணக்குகளை முடக்குவதற்குத் திணைக்களத்துக்கு சட்டபூர்வ அதிகாரம் உள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கிடையில், 2026 ஆம் ஆண்டுக்காக உள்நாட்டு இறைவரி திணைக்களத்துக்கு 2,401 பில்லியன் ரூபாய் வரி வருவாய் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அதன் ஆணையாளர் நாயகம் ருக்தேவி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (அ)

# தேசிய சட்ட உதவி நாளாக ஜுலை மாதம் 6ஆம் திகதி

கொழும்பு, ஜுன். 25

இலங்கையில் ஒவ்வொரு ஆண்டும் ஜுலை மாதம் ஆறாம் திகதியை “தேசிய சட்ட உதவி நாளாக” பிரகடனப்படுத்துவதற்கான விசேட முன்மொழிவுக்கு அமைச்சரவை உத்தியோகபூர்வ அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட விசேட பிரேரணைக்கே இந்த உத்தியோகபூர்வ அனுமதி கிடைத்துள்ளது.

சமூகத்தில் நலிவடைந்த மற்றும் ஓரங்கட்டப்பட்ட மக்கள் உட்பட அனைத்துப் பிரஜைகளுக்கும் நீதிக்கான அணுகுமுறையை எளிதாக்கும் நோக்கில், கடந்த 1978ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க சட்ட உதவிச் சட்டத்தின்கீழ் இலங்கைச் சட்ட உதவி ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக நிறுவப்பட்டது.

பொதுமக்களின் அடிப்படை மனித உரிமைகளைப் பாதுகாத்தல், சட்ட விழிப்புணர்வை மேம்படுத்துதல் மற்றும் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துதல் ஆகிய பணிகளில் இந்த ஆணைக்குழு மிக முக்கிய பங்களிப்பை வழங்கி வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில், பொதுமக்களின் சட்டப்பூர்வ உரிமைகள் மற்றும் அதற்கான பரிகாரங்கள் குறித்த விழிப்புணர்வை மேலும் விரிவுபடுத்தவும், சட்ட அமலாக்கம் குறித்த தேசிய அளவிலான உரையாடல்களை உருவாக்கவும் இத்தகையதொரு விசேட தினம் அவசியமானது என அடையாளங்காணப்பட்டுள்ளது.

இதற்கமையவே, குறித்த வரலாற்றுச் சிறப்புமிக்க 1978 ஆம் ஆண்டின் சட்ட மூலத்தை அங்கீகரித்து, ஆண்டு தோறும் ஜுலை 6 ஆம் திகதியைத் தேசிய சட்ட உதவி நாடாக பிரகடனப்படுத்த அரசாங்கம் உத்தியோகபூர்வமாகத் தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# 11 இலட்சங்களை கடந்துள்ள சுற்றுலாவிகள் எண்ணிக்கை!

கொழும்பு, ஜுன். 25


ஜனவரி மாத தொடக்கம் முதல் கடந்த 21ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 11 இலட்சத்தை கடந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதன்படி, குறித்த காலப்பகுதியில் மொத்தம் 1,104,354 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

ஜுன் முதலாம் திகதி முதல் 21ஆம் திகதி வரை மட்டும் 82,332 பேர் இலங்கைக்கு வந்துள்ளதாகவும் அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

இவ்வருடம் இதுவரை அதிகளவிலான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ளனர். இரண்டாம் இடத்தில் ஐக்கிய இராச்சியம், மூன்றாம் இடத்தில் சீனா ஆகிய நாடுகள் இடம்பெற்றுள்ளன.

மேலும், மாதாந்திர அளவில் அதிக சுற்றுலாப் பயணிகள் வருகை பெற்ற மாதமாக பெப்ரவரி மாதம் பதிவாகியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அநீதிகளையும் இனப்படுகொலைகளையும் உறுதிப்படுத்தும் ஆவணமாகச் செம்மணி!

## சிறீநாத் எம்.பி. சபையில் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூன். 25

யாழ்ப்பாணம் செம்மணியில் தொடர்ச்சியாக மீட்கப்படும் எலும்புக்கூடுகள் தமிழ் மக்களுக்கு எதிராக காலம் காலமாக நேர்ந்த அநீதிகளையும் இனப்படுகொலைகளையும் உறுதிப்படுத்துவதற்கான ஆவணமாகியுள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கம் உறுதியாக முடிவெடுத்து தனது நடுநிலையையும், நீதித் தன்மையும் வெளிப்படுத்த வேண்டும் என்று இலங்கை தமிழ் அரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இளையதம்பி சிறீநாத் வலியுறுத்தினார்.



பாராளுமன்றத்தில் நடைபெற்ற சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டமூலம் இரண்டாவது மதிப்பீடு, சிறப்பு பண்ட அற வீட்டுச் சட்டத்தின் கீழான வர்த்தமானி அறிவித்தல்களில் வெளியிடப்பட்ட இரண்டு கட்டளைகள், இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான விதிமுறைகள் என்பன மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

செம்மணியில் 400 இற்கும் மேற்பட்ட எலும்புக்கூடுகள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆதாரங்கள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. நீதியமைச்சின் அனுசரணையில் இந்த விடயத்தை வெளிக்கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தமைக்கு அரசாங்கத்துக்கு நன்றியை கூறினாலும் நீதியை பெற்றுக்கொடுக்கவும், அதனை மேலும் வலுவுள்ளதாக மாற்றுவதற்கும் பல்வேறு பகுதிகளில் புதைக்கப்பட்ட மனித உடலங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகளை துரித கதியில் உரிய காலத்தில் எடுக்க வேண்டும்.

தமிழ் மக்களுக்கு எதிராக காலம் காலமாக செய்யப்பட்ட அநீதிகளை வெளிக்கொண்டு வருவதற்காகவும், தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலையை உறுதிப்படுத்துவதற்காக இந்த விடயங்களை ஆவணங்களாக கொண்டு செல்லும் பொறுப்பு உள்ளது. இந்த விடயத்தில் அரசாங்கம் உறுதியாக முடிவெடுத்து தனது நடுநிலைத் தன்மையையும் நீதித்தன்மையும் வெளிப்படுத்த வேண்டும்-என்றார்.

(அ)

# கோணாவில் காந்தி வித்தியாலயத்தில் கற்றல் வளநிலையக் கட்டடம் திறப்பு

கிளிநொச்சி, ஜூன். 25



கல்வி அமைச்சின் "அருகிலுள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" திட்டத்தின் கீழ் 21 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட கிளிநொச்சி, கோணாவில் காந்தி ஆரம்ப வித்தியாலயத்தின் இரண்டு மாடிகளைக் கொண்ட புதிய கற்றல் வளநிலையக் கட்டடத் திறப்பு விழா நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி வி.செல்வானந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு புதிய கட்டடத்தை மாணவர்களின் பாவனைக்காக உத்தியோகபூர்வமாகத் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய ஆளுநர், பாடசாலையின் வகுப்பறைகள் உள்ளிட்ட ஒட்டுமொத்த பாடசாலைச் சூழலும் மிகச் சிறப்பான முறையில் பேணப்படுகின்றமைக்காகப் பாடசாலைச் சமூகத்தைப் பாராட்டினார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன், கிளிநொச்சி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரதீபா காயத்திரி கஜபதி, கரைச்சி கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.தர்மரத்தினம், தூய்மை இலங்கைச் செயலணியின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பாளர் மருதன் மோகன் மற்றும் பாடசாலையின் முன்னாள் அதிபர்கள், அயல் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(அ)

# இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தை முழுமையாக கணினிமயமாக்க அனுமதி

கொழும்பு, ஜூன். 25

இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் அனைத்துப் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக விரிவான கணினி வலையமைப்பு திட்டமொன்றை நிறுவுவதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சராக பிரதமர் சமர்ப்பித்த முன்மொழிவுக்கே இந்த அனுமதி கிடைத்துள்ளது.

இலங்கை பரீட்சைத் திணைக்களம் தேசிய பரீட்சைகள் உட்பட வருடத்திற்கு 300 இற்கும் மேற்பட்ட பரீட்சைகளை நடத்துகின்றது. எனினும், திணைக்களத்தின் தொழில்நுட்பப் பணிகள் ஒவ்வொரு பிரிவிற்கும் தனித்தனியான கணினி அமைப்புகளாகக் காணப்படுவதால், பரீட்சை செயல்பாடுகளில் பெரும்பாலான அத்தியாவசியப் பணிகள் மனித வளத்தைக் கொண்டே மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அத்துடன், தரவுகள் மற்றும் பதிவேடுகள் பொதிகளாகப் பிரிவுகளுக்கு இடையே மாற்றப்படுவதால், பரீட்சை முடிவுகள் தாமதமடைதல், தவறுகள் ஏற்படுதல், பொதிகள் மற்றும் மனித வளங்கள் வீணடிக்கப்படுதல் போன்ற குறைபாடுகள் இனங்காணப்பட்டுள்ளன.

தற்போது அரச துறையில் டிஜிற்றல் மயமாக்கல் சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், பரீட்சைத் திணைக்களத்தின் கணினி வலையமைப்பு உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமானது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

இதற்கமைய, பரீட்சைத் திணைக்களத்தின் பணிகளை மிகவும் துரிதமாகவும், துல்லியமாகவும், திறமையாகவும் மாற்றுவதற்காக இந்த நவீன கணினிமயமாக்கல் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

(அ)

# ஐந்து வயதுக்குக் குறைந்த சிறுவர்களின் ஆரோக்கிய மேம்பாட்டுக்கு தேசிய திட்டம்

கொழும்பு, ஜூன். 25

இலங்கையில் 05 வயதுக்குக் குறைவான சிறுவர்களின் சுகாதாரம் மற்றும் நேர்மறையான நடத்தை மாற்றங்களை மேம்படுத்தும் நோக்கில் "சமூக மற்றும் நடத்தை மாற்றத்தின் மூலம் சிறுவர் சுகாதார மேம்பாட்டுக்கான தேசிய தொடர்பாடல் வேலைத்திட்டம்" நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்த அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் முன்வைத்த கூட்டு யோசனைக்கு அமைவாக இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் சிறுவர்களிடையே காணப்படும் சில முக்கிய சுகாதாரப் பிரச்னைகளுக்கு தீர்வு காண எதிர்பார்க்கப்படுகிறது.

அவற்றில்:

பலவீனமான உடல்நிலை மற்றும் வாய்ச் சுகாதார குறைபாடுகள் அதிகளவு சீனி, உப்பு கொண்ட உணவுகளை உட்கொள்ளும் பழக்கம் சீனி கலந்த பானங்கள் மற்றும் வெதுப்பக உணவுகளின் அதிக பயன்பாடு, உடற்பயிற்சி குறைபாடு மற்றும் தூக்கமின்மை கைபேசி, தொலைக்காட்சி போன்ற டிஜிற்றல் சாதனங்களின் அதிக பயன்பாடு, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு குறைபாடு போன்ற விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் 2025 - 2029 முன்பிள்ளைப்பருவ பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான தேசிய மூலோபாய செயற்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில், யுனிசெப் நிதியுதவியுடன் சுகாதார மேம்பாட்டுப் பணியகம் மூலம் 2025 ஆம் ஆண்டு இந்த வேலைத்திட்டம் முன்னோடியாக நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் கீழ் 277 உத்தியோகத்தர்கள் பிரதான பயிற்றுவிப்பாளர்களாக பயிற்சி பெற்றதுடன், அவர்களினூடாக நாடு முழுவதும் 900 முன்பள்ளி ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டது.

மேலும், முன்பள்ளிகளில் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுக்க தேவையான தொடர்பாடல் கருவிகள் வழங்கப்பட்டு, அவற்றின் பயன்பாடு கண்காணிக்கப்பட்டது.

முன்னோடி திட்டத்தில் கிடைத்த சாதகமான பெறுபேறுகளை கருத்தில் கொண்டு, இந்தத் திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் உள்ள முன்பள்ளிகளுக்கு விரிவுபடுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.(அ)

# சிறுபோக நெல் கொள்வனவு குறித்து ஜனாதிபதி தலைமையில் ஆராய்வு!

கொழும்பு, ஜூன். 25

சிறு போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்கான திட்டங்கள் தொடர்பில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முன் தினம் விசேட கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றுள்ளது.

கடந்த சிறு போகத்தில் கொள்வனவு செய்யப்பட்ட நெல் கையிருப்புகள் இன்னும் சந்தைக்கு முழுமையாக விநியோகிக்கப்படாத நிலை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதுடன், அந்த நெல் கையிருப்புகளை சந்தைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் ஜனாதிபதி அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

இதேவேளை, தற்போதைய சிறு போகத்தில் நெல் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியை ஒதுக்க நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

மாவட்ட மட்டத்தில் உள்ள நெல் களஞ்சியசாலைகளின் நிலைமை, பாதுகாப்பான நெல் கையிருப்பு மற்றும் அவற்றுக்கான தரவுகளை முறையாக பேணுதல் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

எதிர்காலத்தில் காலநிலை மாற்றங்களால் ஏற்படக்கூடிய சவால்களை எதிர்கொள்ள, போதுமான பாதுகாப்பான நெல் கையிருப்புகளை பேணுவது மிக முக்கியமான விடயம் என ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார்.

இந்த நடவடிக்கைகள் சாதாரண நிர்வாக செயற்பாடாக அல்லாமல், உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய முக்கிய விடயமாகக் கருதி செயற்பட வேண்டும் எனவும் அவர் அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார்.

(அ)

# கல்வித்துறைப் பிரச்னைகளை உடனடியாக தீர்க்க நடவடிக்கை

கொழும்பு, ஜூன். 25

கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு பிரதமரும், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரினி அமரசூரிய தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியுள்ளது.

இதில் ஆரம்ப பாடசாலைகளின் கட்டுமானத்தில் ஒரு தரநிலையின்படி பொதுவான திட்டம் மற்றும் மாதிரிகளை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியம், மாற்றுப் பாடசாலைகளின் நிர்வாகம் தொடர்பான பிரச்னைகள், மாகாண மட்டத்தில் பாடசாலைகளின் கட்டுமானத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம், தொழிற்கல்வித் துறையில் உள்ள பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டன.

இவ்விடயங்கள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த பிரதமர், இப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு அறிவுறுத்தினார்.

மேலும், இந்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுவின் கீழ் அமைக்கப்பட்ட உப குழுக்களின் முன்னேற்றம் குறித்தும் இங்கு கேட்டறியப்பட்டது.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## மாகாண அதிகாரங்களை...

மேற்கொள்ளப்படுவது பொருத்தமற்றது எனவும், குறிப்பாக சுற்றுச்சூழல் விடயம் தொடர்பான அதிகாரங்கள் மற்றும் ஒருங்கிணைந்த பட்டியலில் உள்ள விடயங்களில் தலையீடு செய்வது அரசியலமைப்பின் நோக்கத்துக்கு முரணானது எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மாகாண சபைகள் தற்போது மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாத நிலையில் செயல்படுவதால், அவற்றின் அதிகாரங்களை பாதுகாக் கும் அரசியல் பொறுப்பு கொண்ட அமைப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நிலைமையை சரிசெய்வதற்கான மிக விரைவான வழி மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதாகும் என தெரிவித்த சஜித் பிரேமதாச, தேர்தல்களின் மூலம் மக்கள் தெரிவுசெய்யும் அரசியல் அதிகாரம் உருவாகி, மாகாண சபைகளின் உரிமைகள் மற்றும் அதிகாரங்களை பாதுகாக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

ஐக்கிய மக்கள் சக்தி 13ஆவது திருத்தத்தை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதாகவும், தமது கட்சி "13 பிளஸ்" அல்லது "13 மைனஸ்" என்ற அணுகுமுறையை கொண்டிருக்கவில்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மாகாண சபைகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் மற்றும் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதே தமது கட்சியின் நிலைப்பாடு எனவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் கூறினார். (அ)

## வவுனியா மாநகர...

அதன்படி, குறித்த விசாரணை ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்பட்ட தீர்க்கமான விசாரணைகளின் இறுதி அறிக்கை மற்றும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள முக்கிய பரிந்துரைகளுக்கு அமைவாகவே, இவர்கள் இருவரும் பதவிகளில் இருந்தும், உறுப்பினர் நிலைகளில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா மாநகரசபை முதல்வரான சுந்தரலிங்கம் காண்டீபன் வவுனியா மாநகரசபை மேயர் பதவியிலிருந்தும், மாநகரசபை உறுப்பினர் பதவியிலிருந்தும் ஆளுநருக்கு உரிய அதிகாரங்களை பயன்படுத்தி நீக்கப்படுகிறார் என வர்தமானியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான வர்த்தமானி அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

1947ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 277 ஆம் பிரிவும், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (தொடர்புடைய ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவும் இணைந்து வழங்கியுள்ள அதிகாரங்களின் கீழ் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

விசாரணை அறிக்கையின் அடிப்படையில், வவுனியா மாநகரசபை முதல்வர் சுந்தரலிங்கம் காண்டீபன், உள்ளூராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 576) பிரிவு 277(1) இன் (ஏ) மற்றும் (டீ) உபபிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி மேயராகத் தொடரத் தகுதியற்றவர் என நான் திருப்தியடைந்துள்ளேன். எனவே, 1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க உள்ளூாராட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் 277(1) பிரிவும், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (தொடர்புடைய ஏற்பாடுகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவும் வழங்கியுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், 2026 ஜூன் 24 முதல் அமுலுக்கு வரும் வகையில் சுந்தரலிங்கம் காண்டீபன் வவுனியா மாநகரசபை மேயர் பதவியிலிருந்தும், மாநகரசபை உறுப்பினர் பதவியிலிருந்தும் நீக்கப்படுகிறார் என அறிவிக்கப்படுகிறது - என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆளுநரின் இந்த அதிரடி நடவடிக்கை வடக்கு மாகாண உள்ளூராட்சி அரசியல் வட்டாரங்களில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## டித்வா சூறாவளி..

அரசாங்கத்தின் அண்மைக்காலத் தரவுகளின்படி, கொழும்பு மாவட்டத்தில் மாத்திரம் 18 குடும்பங்களைச் சேர்ந்த 61 பேர் இரண்டு வெவ்வேறு பாதுகாப்பு மையங்களில் தங்கியுள்ளனர். அத்தோடு, கேகாலை மாவட்டத்தில் 43 குடும்பங்க ளைச் சேர்ந்த 133 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 35 குடும்பங்களைச் சேர்ந்த 140 பேரும் தற்போதும் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்கள் தங்களின் வீடுகளைச் சீரமைப்பதற்கான முழுமையான மற்றும் விரைவான இழப்பீட்டுத் தொகையை அரசாங்கம் தங்களுக்கு வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கேப்பாபிலவு காணி...

போராட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மாற்றுக்காணிகளை தாம் ஏற்றுக் கொண்டதாக ஜனாதிபதி பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரனிடம் தெரிவித்த கருத்து முற்றிலும் தவறானது எனவும் தாம் அப்படி எந்த மாற்றுக் காணிகளையும் ஏற்கப் போவதில்லை எனவும் மக்கள் குறிப்பிட்டனர்.

வட மாகாண ஆளுநர் நேரில் வருகை தந்து மக்களின் உண்மை நிலையை வெளிக்கொண்டு வருவதோடு, வாழ்விடப் பிரச்னைக்கு உடனடியான சாதகமான தீர்வை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் கேப்பாபிலவு பூர்வீக மக்கள் வேதனையுடன் கோரிக்கை விடுத்துள்ளனர்.

171 ஏக்கர் காணிகளை தொடர்ந்தும் இராணுவத்தின் 59 ஆவது காலால் படைப்பிரிவினர் தமது கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். எனவே எமது காணிகளை விடுவிக்கக் கோரி இன்றிலிருந்து (நேற்று) தொடர் போராட்டமாக இந்தப் போராட்டத்தை தாம் முன்னெடுக்கப் போவதாக மக்கள் தெரிவித்ததுடன், கேப்பாபிலவு இராணுவ முகாமுக்கு முன்பாக அடையாள உண்ணாவிரதத்தில் தொடர்ந்து ஈடுபட உள்ளதாகவும் தெரிவித்துள்ளனர். (அ)

## கோட்டாவின் மனு...

நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

மனுதாரரான கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தொடர்ந்து வாதங்களை முன்வைத்தார். பிரதிவாதிகள் சார்பில் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் சுஹர்ஷி ஹேரத் ஆஜரானார்.

இந்த மனுவில் பொலிஸ் மா அதிபர், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் ஷானி அபேசேகர, அதன் பொறுப்பதிகாரி மாதவ குணவர்தன மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். (அ)

## காங்கேசன் சிமெந்து...

வழக்கம்போல் இடம்பெற்றுக் கொண்டிருந்த சமயம், அங்கு பயன்படுத்தப்பட்ட எரிவாயுவில் ஏற்பட்ட திடீர் கசிவு காரணமாக இந்தத் தீ விபத்து சம்பவித்துள்ளது.

கட்டுப்பாட்டை இழந்த தீச் சுவாலை, தொழிற்சாலை வளாகத்தில் தங்கியிருந்த இராணுவத்தினரின் உடைமைகள் மற்றும் மெத்தைகள் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த பகுதிக்கும் வேகமாகப் பரவியது.

இதன் காரணமாக தொழிற்சாலை வளாகத்தில் இருந்து பாரிய தீச் சுவாலைகள் எழும்பியதுடன், அப்பகுதி முழுவதும் கரும் புகை மண்டலமாக காட்சியளித்தது.

தீ விபத்து குறித்து உடனடியாகத் தகவல் வழங்கப்பட்டதை அடுத்து, யாழ்ப்பாணம் மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். தீயணைப்பு வாகனங்கள் மூலம் பல மணிநேரப் போராட்டத்துக்குப் பிறகு தீ முழுமையாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

இவ்விபத்தினால் ஏற்பட்ட ஒட்டுமொத்த சொத்துச் சேத விவரங்கள் குறித்த மேலதிக விசாரணைகளை பாதுகாப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

## 16 வயதுக்குட்பட்டோர்...

16 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் சமூக ஊடகங்களை அணுகுவதைத் தடுப்பதற்கும், அவர்கள் இணையத்தில் செலவிடும் நேரத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் இணைய சேவை வழங்குநர்களுக்கு உத்தரவிடப்படும்.

இதற்கான செயற்பாடுகளைக் கண்காணிக்கவும், முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளவும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் கீழ் "அங்கீகரிக்கப்பட்ட ஆணையாளர்" ஒருவர் நியமிக்கப்படுவார்.

சிறுவர்களை இணையத்தில் உள்ள அபாயகரமான உள்ளடக்கங்கள் மற்றும் செயற்பாடுகளிலிருந்து பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.

இந்த சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால், இலங்கையில் சேவைகளை வழங்கும் அனைத்து சமூக ஊடக நிறுவனங்களும் இந்த வயதுக் கட்டுப்பாடுகளைக் கட்டாயம் நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கிளிநொச்சி போக்குவரத்து..

வேண்டும் என வலியுறுத்தி நேற்று மக்களால் போராட்டம் நடத்த ப்பட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி, கிளிநொச்சி பொலிஸ் நிலையம் முன்பாக பாதசாரி கடவையை கடக்க முற்பட்டபோது, அதிவேகமாக மோட்டார் சைக்கிளை செலுத்திய ஒருவரால் ஏற்படுத்தப்பட்ட வீதி விபத்தில், பெருமாள் கணேசன் என்ற 64 வயதான ஓய்வுபெற்ற அதிபர் படுகாயமடைந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இவரின் இறப்புக்கு நீதி பெற்றுத் தரவேண்டும் எனவும்,

கிளிநொச்சி பகுதியில் பல்வேறு விபத்துக்கள் மது மற்றும் போதைப்பொருள் பாவனையினால் இடம்பெறுவதாகவும், இதற்கு கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் போக்கு வரத்து பொலிஸ் பொறுப்பு அதிகாரி உரிய பதிலை வழங்கவேண்டும் எனவும் தெரிவித்தும், குறித்த போக்கு வரத்து பொலிஸ் பொறுப்பதிகாரி உடன் பதவி விலக வேண்டும் என வலியுறுத்தியும் நேற்றுப் போராட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கோரிக்கைக்கு, ஐந்து நாள்களுக்குள் உரிய பதிலை பெற்றுத்தர வேண்டும் எனவும், இல்லாவிட்டால் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம், மக்கள் தமது ஆதங்கத்தை நேரடியாக வெளிப்படுத்தியுள்ளனர்.

சம்பந்தப்பட்ட பொலிஸார் மற்றும் சம்பந்தப்பட்ட சிவில் அமைப்புக்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, உரிய தீர்வை பெற்று தர நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்ததை தொடர்ந்து, போராட்டம் நிறைவுக்கு வந்தது. (அ)

## வடக்கு காணி சட்ட திருத்தம்...

விசேட அழைப்பின் பேரில், பதிவாளர் நாயகத்துடனான உயர்மட்டக் கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் 160 ஆண்டு கால வரலாற்றில் முதலாவது பெண் பதிவாளர் நாயகமாகப் பதவியேற்றுள்ள சசிதேவி ஜலதீபனுக்கு ஆளுநர் தனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்து இக்கலந்துரையாடலை ஆரம்பித்து வைத்தார்.

இக்கலந்துரையாடலில் வெளிப்படுத்தல் உறுதி ஊடான மோசடிகள் தொடர்பில் ஆளுநர் பல முக்கிய விடயங்களைச் சுட்டிக்காட்டினார்.

"வெளிப்படுத்தல் உறுதி ஊடான காணிப் பதிவுகள் முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும் என்பது எமது நோக்கமல்ல. மாறாக, அதன் பெயரால் அரங்கேறும் மிகப்பெரிய மோசடிகளைத் தடுத்து நிறுத்த வேண்டியதே எமது தலையாய கடமையாகும். வலி. வடக்கில் இராணுவத்தினரிடமிருந்து விடுவிக்கப்பட்ட காணிகள் மற்றும் புலம்பெயர்ந்து வாழும் மக்களின் காணிகள் கூட இவ்வாறு போலி உறுதிகள் மூலம் அபகரிக்கப்பட்டுள்ளன," என ஆளுநர் கவலை வெளியிட்டார்.

மேலும், "கடந்த ஆட்சியின் போது காணி மோசடிகளுடன் தொடர்புடைய சட்டத்தரணிகளைக் கைது செய்வதற்குப் பொலிஸார் சட்டமா அதிபரின் அனுமதியைப் பெற வேண்டும் என்ற கட்டுப்பாடான வழிகாட்டல் வழங்கப்பட்டிருந்தது. இவ்விடயத்தை நான் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் கவனத்திற்குக் கொண்டு சென்றதையடுத்து, தற்போது அந்தத் தடைகள் நீக்கப்பட்டுள்ளன.

போலி உறுதிகளை எழுதுவதற்குப் பதிவாளர் திணைக்களத்திலுள்ள சில அதிகாரிகளும் உடந்தையாக இருந்து, காணிகளின் மூல ஆவணங்களான தோம்புகளை அழித்திருக்கின்றார்கள் என்பது கசப்பான உண்மையாகும்.

எனவே, இவ்வாறான மோசடிகளைத் தடுப்பதற்கான உறுதியான பொறிமுறையை நாம் விரைவாக உருவாக்க வேண்டும்," என ஆளுநர் வலியுறுத்தினார்.

இதன்போது, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் மேலதிக மாவட்ட செயலாளர்கள் (காணி) தமது மாவட்டங்களில் எதிர்கொள்ளும் சிக்கல்களை எடுத்துரைத்தனர். ஒரு காணி அரச காணியா அல்லது தனியார் காணியா என்பதை உறுதிப்படுத்துவதற்குப் பதிவாளர் திணைக்களம் 14 நாள்கள் அவகாசம் மட்டுமே வழங்குவதாகவும், குறித்த காலத்துக்குள் பதிலளிப்பது சவாலானது எனவும் சுட்டிக்காட்டினர்.

மேலும், போலிப் பெயர்களில் உறுதிகள் எழுதப்படுவதால் சிக்கல்கள் மேலெழுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர். இதற்குப் பதிலளித்த வடக்கு மாகாண காணி ஆணையாளர், அரச காணியொன்று வெளிப்படுத்தல் உறுதி மூலம் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், பின்னர் அதனை இரத்துச் செய்வதற்கான சட்ட ஏற்பாடுகள் உள்ளதைச் சுட்டிக்காட்டினார். இந்த விடயங்கள் தொடர்பில் தெளிவுபடுத்திய பதிவாளர் நாயகம், "2022ஆம் ஆண்டு சுற்றறிக்கையின்படி அரச காணியா என்பதை உறுதிப்படுத்தப் பிரதேச செயலாளர்களுக்கு 3 மாதங்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

தேவையேற்படின் மேலதிக கால நீடிப்பையும் கோர முடியும். பிரதேச செயலகக் காணிப் பயன்பாட்டுக் குழுக் கூட்டங்களில் காணி உரித்துத் திணைக்கள அதிகாரிகளையும் இணைத்துக்கொள்வதன் மூலம் இதற்கான தீர்வுகளை இலகுவாகப் பெறலாம், என்றார்.

எதிர்காலத்தில் வெளிப்படுத்தல் உறுதி மூலம் காணிகள் பதிவு செய்யப்படும் போது, அதனைப் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதைக் கட்டாயமாக்கும் சரத்து சட்டத்திருத்தத்தில் உள்ளடக்கப்பட வேண்டும் என ஆளுநர் முன்மொழிந்தார்.

மேலும், இக்கலந்துரையாடலில் பங்கேற்ற முன்னாள் மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் அவர்கள், வெளிப்படுத்தல் உறுதிகளைப் பதிவு செய்யும்போது காணியின் வரைபடம் மற்றும் நான்கு எல்லைகளிலும் உள்ளவர்களிடமிருந்தான சத்தியக்கடதாசி ஆகியவற்றைக் கட்டாயமாக்குதல் உள்ளிட்ட சட்டத்திருத்தங்களின் அவசியத்தை வலியுறுத்தினார். (அ)

## வடக்கு காணி நொத்தாரிசுகள்...

செயலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போதே பொலிஸார் இவ்வாறு தெரிவித்தனர்.

குறித்த கலந்துரையாடலில்,

2022ஆம் ஆண்டு முதல் இதுவரையான காலப்பகுதியில், யாழ்ப்பாணம் - 1874, மன்னார் - 958, கிளிநொச்சி - 570, முல்லைத்தீவு - 321 மற்றும் வவுனியா - 116 ஆகிய மாவட்டங்கள் உள்ளடங்கலாக வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 3,839 வெளிப்படுத்தல் உறுதிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை, 2023ஆம் ஆண்டு 16 வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் 15 வழக்குகள் நிறைவுற்றன, 2024 ஆம் ஆண்டு 31 வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் 25 வழக்குகள் நிறைவு பெற்றுள்ள நிலையில் , 6 வழக்குகளின் விசாரணை நிலுவையில் உள்ளது. 2025ஆம் ஆண்டு 20 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில், 6 வழக்குகள் நிறைவுடைந்துள்ள நிலையில், 14 வழக்குகளின் விசாரணை நிலுவையில் உள்ளது. அத்துடன் 2026ஆம் ஆண்டு மே மாதம் வரை 9 வழக்குகள் பதிவு செய்யப்பட்ட நிலையில் ஒரு வழக்கு நிறைவடைந்துள்ளது, 8 வழக்கு விசாரணைகள் நிலுவையில் உள்ளன என பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

ஈழநாடு
Eelanadu

# மக்களின் காணிப் பிரச்னைகளை இன்னும் எவ்வளவு காலம் இழுத்தடிக்கப்போகிறோம்?

## அதிகாரிகளிடம் வடக்கு ஆளுநர் கேள்வி

கிளிநொச்சி, ஜூன். 25

போர் முடிந்து 17 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்னமும் எங்கள் மக்களின் காணிப் பிரச்னைகளை எவ்வளவு காலத்துக்கு நாம் இழுத்தடிக்கப் போகின்றோம்? பாதிக்கப்பட்டவர்கள் எமது முல்லைத்தீவு மக்கள் என்ற உணர்வோடும், அவர்களுக்காகவே நாம் சேவையாற்றுகின்றோம் என்ற கடமையுணர்வோடும் அதிகாரிகள் பணியாற்றவேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் வேண்டுகோள் விடுத்தார்.

வடக்கு மாகாண காணி ஆணையாளர் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டத்தின் "5 ஆண்டுச் செயலாற்றுகை" தொடர்பான விசேட மீளாய்வுக் கூட்டம் கிளிநொச்சியில் நடைபெற்றது. இதற்கு தலைமை தாங்கிய ஆளுநர், இறுதிப் போரினால் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் காணி ஆவணங்களும், மக்களின் தனிப்பட்ட ஆவணங்களும் அழிவடைந்துள்ள தாகக் குறிப்பிட்டார்.

"மக்கள் தமக்கான காணி உறுதிப்பத்திரங்களுக்காக இன்னமும் அலைந்து திரிகின்றனர். பாதிக்கப்பட்டவர்கள் எமது மக்கள் என்ற உணர்வுடன் அவர்களுக்காக சேவையாற்ற வேண்டும்" என ஆளுநர் தெரிவித்தார்.

காணிப் பிரச்னைகளைத் தீர்க்க மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், காணி அலுவலர்கள் உள்ளிட்ட அனைத்து அதிகாரிகளும் முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். செயற்றிட்டத்தின் முன்னேற்றம் எதிர்பார்த்த அளவில் இல்லாதமை கவலைக்குரியது எனக் குறிப்பிட்ட அவர், தாமதமின்றி நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை வழங்கினார். மாகாண காணி ஆணையாளர் இ.குருபரன், வடக்கு மாகா ணத்தில் 198,751 காணி தொடர்பான விடயங்கள் தீர்க்கப்பட வேண்டியுள்ளதாக தெரிவித்தார். இதனை நிறைவேற்றுவதற்காக விசேட செயற்றிட்டங்கள் மற்றும் ஆளணிச் சீராக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

மேலும், அதிகாரிகளின் தாமதங்களால் காணி நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதுடன், மாகாணத்தின் வருமானமும் இழக்கப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

கூட்டத்தில் பிரதேச செயலக ரீதியான முன்னேற்றங்கள் ஆராயப்பட்டதுடன், பின்னடைவுகளுக்கான காரணங்கள் தொடர்பில் அதிகாரிகளிடம் விளக்கங்கள் கோரப்பட்டன. தொடர்ந்து செயற்பாடுகளில் பின்னடைவு ஏற்படுத்தும் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் செயற்றிட்ட முன்னேற்றங்களை பிரதேச செயலாளர்கள் வாராந்தமும், மாவட்ட செயலாளர் மாதாந்தமும் மீளாய்வு செய்ய வேண்டும் என ஆளுநர் அறிவுறுத்தினார்.

## ஆசிரியர் வேலைவாய்ப்பு பரீட்சையில் அநீதி;

# யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக இன்று வேலையில்லா பட்டதாரிகள் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூன். 25

வேலையற்ற பட்டதாரிகள் இன்று வியாழக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தின் முன்பாகப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக வடக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் சங்கச் செயலாளர் ஜேம்ஸ் கபிலன் போல் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் வேலைவாய்ப்பு போட்டிப் பரீட்சையில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் அரசாங்கத்துக்கு தெரியப்படுத்த வேண்டும்.

அத்தோடு வடக்கு மாகாணத்தில் பல வேலைவாய்ப்பு வெற்றிடங்கள் காணப்படும் நிலையில் அவற்றுக்கு பட்டதாரிகளை உள்ளீர்க்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களில் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்களை வழங்க வேண்டும்.

அதனால் வேலைவாய்ப்பு கோரி யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக இன்று வியாழக்கிழமை காலை போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம். தீர்வுகள் கிடைக்கப் பெறாதுவிடின் எதிர்காலத்தில் தொடர் போராட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் தீர்மானிப்போம் - என்றார். (அ)

# ஆட்பதிவு திணைக்கள அதிகாரிகள் பெயரில் புதிய 'வட்ஸ் அப்' மோசடி!

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜூன். 25

ஆட்பதிவு திணைக்களத்தின் பெயரைப் பயன்படுத்தி புதிய வகை வட்ஸ்அப் மோசடி நடவடிக்கைகள் இடம்பெறுவதாக இலங்கை கணினி அவசர பதிலளிப்பு பிரிவு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இந்த மோசடி செய்திகள் உத்தியோகபூர்வ அறிவிப்புகளைப் போன்று நம்பகமான முறையில் தயாரிக்கப்படுவதால், பொதுமக்கள் எளிதில் ஏமாறும் அபாயம் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோசடிக்காரர்கள் ஆட்பதிவு திணைக்களத்தின் பெயர், தொடர்பு விவரங்கள் மற்றும் அதிகாரிகளின் பெயர்களைப் பயன்படுத்தி போலியான அறிவிப்புகளை அனுப்புகின்றனர். அந்தச் செய்திகளில் நபர்களின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி போன்ற தனிப்பட்ட தகவல்களும் இடம்பெறுகின்றன.

அடையாள அட்டை விவரங்களை சரிபார்ப்பதற்காக திணைக்களத்துக்கு நேரில் வர வேண்டும் எனவும், குறிப்பிட்ட நாள், நேரம் மற்றும் இடத்தில் வருகை தர வேண்டும் எனவும் போலியான அறிவிப்புகளில் குறிப்பிடப்படுகின்றது.

மேலும், கட்டைவிரல் அடையாளப் பதிவு, கொண்டு வர வேண்டிய ஆவணங்கள் போன்ற உண்மையான நடைமுறைகளைப் போன்று தோற்றமளிக்கும் தகவல்களும் இதில் சேர்க்கப்படுகின்றன.

குறித்த நேரத்தில் வராவிட்டால் அடையாள அட்டை சேவைகள் நிறுத்தப்படும் என அச்சுறுத்துவதுடன், நேரத்தை மாற்றுவதற்காக போலியான தொலைபேசி இலக்கங்களையும் வழங்குகின்றனர்.

அந்த இலக்கங்களை தொடர்பு கொள்ளும் போது, மோசடிக்காரர்கள் ஒற்றை முறை கடவுச்சொல், வங்கி கணக்கு விவரங்கள் உள்ளிட்ட முக்கிய தகவல்களைப் பெற்று நிதி மோசடிகளில் ஈடுபடுகின்றனர்.

ஆட்பதிவு திணைக்களம் எந்தவொரு அடையாளச் சரிபார்ப்பு அல்லது உத்தியோகபூர்வ அறிவிப்புகளையும் வட்ஸ் அப் மூலம் அனுப்புவதில்லை என கணினி அவசர பதிலளிப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, சந்தேகத்துக்கிடமான வட்ஸ்அப் செய்திகளுக்கு பதிலளிக்க வேண்டாம், வழங்கப்படும் இணைப்புகளை திறக்க வேண்டாம், தெரியாத இலக்கங்களை தொடர்புகொள்ள வேண்டாம் என பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், ஒ.ரி.பி. இலக்கங்கள், வங்கி விவரங்கள் அல்லது தனிப்பட்ட தகவல்களை எந்த நிலையிலும் பிறருடன் பகிர வேண்டாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# செம்மணி தொடர்பில் சோமரத்னவிடம் சர்வதேச விசாரணை நடத்தவேண்டும்!

## ரவிகரன் எம்.பி. கோரிக்கை



கொழும்பு, ஜூன் 25

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷவை பன்னாட்டு விசாரணைக்கு உட்படுத்தி உண்மைகளை வெளிக்கொணர நடவடிக்கை எடுக்கவேண்டும் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய அவர், செம்மணி மனிதப் புதைகுழி தற்போது நாட்டில் முக்கியமான மனிதப் புதைகுழியாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக தெரிவித்தார். இதுவரை 412 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றில் 390 எலும்புக்கூடுகள் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சிறார்கள், பெண்கள், ஆண்கள் மற்றும் முதியவர்கள் உள்ளிட்ட பலரின் எச்சங்கள் தொடர்ச்சியாக மீட்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

செம்மணி புதைகுழியை நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேரில் பார்வையிட்டு, உரிய விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என தெரிவித்தமை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாகவும் ரவிகரன் கூறினார்.


1996 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்ட இராணுவ லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்ஷ, பின்னர் செம்மணி பகுதியில் பெருமளவான பொதுமக்கள் புதைக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் வழங்கியதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தத் தகவல்களின் அடிப்படையில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளில் 15 மனித எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதாகவும், பின்னர் விசாரணைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது மீண்டும் செம்மணி அகழ்வாய்வுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், சோமரத்ன ராஜபக்ஷ சர்வதேச விசாரணையாளர்கள் முன்னிலையில் சாட்சியமளிக்கத் தயாராக இருப்பதாக முன்னர் தெரிவித்திருந்ததாகவும் ரவிகரன் தெரிவித்தார்.

எனவே, செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் அவரிடம் பன்னாட்டு விசாரணை நடத்தி, உண்மைகளை வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார். (அ)

# தமிழக சமூக நீதித்துறை அமைச்சர் வன்னி அரசை சந்தித்தார் சிறீதரன்!



சென்னை, ஜூன். 25

தமிழ்நாடு மாநிலத்தின் சமூக நீதித்துறை அமைச்சரும், நீண்டகால அரசியல் செயற்பாட்டாளரும், ஈழத்தமிழ் மக்களுடைய விடுதலையோடு இரண்டறக் கலந்தவருமான அமைச்சர் வன்னி அரசுவை, அவருடைய அமைச்சு அலுவலகத்தில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார். இச்சந்திப்பின்போது, சமூக நீதித்துறை அமைச்சராகத் தனது பணிகளைச் சிறப்பாக ஆற்றிவரும் அமைச்சர் வன்னி அரசுவுக்கு வாழ்த்து தெரிவித்து, சந்திப்பின் நினைவாகப் புத்தகம் ஒன்றையும் வழங்கினார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில், தமிழ்நாடு முதல்வர் ஜோசப் விஜய் தலைமையிலான அரசில், சமூக நீதித்துறை அமைச்சராகவும், அக்கட்சியின் மாநில விவகாரங்கள் குறித்த கொள்கைக் குழுவின் அங்கத்தவராகவும் பணியாற்றி வரும் ஒரு மூத்த அரசியல் தலைவராக வன்னி அரசு விளங்குகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 25.06.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org